# இயல் 6.7 - அளவைகள்

பயிற்சி எண் :: 6.7.1.2.G

அளவைகள் - வெவ்வேறு அலகுகள் அடங்கிய பயிற்சி VII

## அளவைகள் - வெவ்வேறு அலகுகள் அடங்கிய பயிற்சி VII

மணிமாறனின் 5 ஏக்கர் நிலத்தில் கடந்த அறுவடையில் 15.6 டன் நெல் விளைந்திருந்தது. அதை அவர் 50 கிலோ கொள்ளும் சாக்கு மூட்டைகளில் நிரப்பி அவருடைய சிறு வாகனத்தில் ஏற்றி விற்பனைக்கூடத்திற்கு எடுத்துச்சென்றார். அந்த வாகனத்தில் ஒரு முறைக்கு 40 மூட்டைகள் ஏற்ற இயலும் எனில், அறுவடையில் வந்த எல்லா நெல்லையும் விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச் செல்ல எத்தனை முறை அந்த வாகனம் சென்று வர வேண்டும்?

---

அறுவடையில் வந்த நெல்லின் எடை} = 15.6 டன் = 15600 கி.கி

ஒரு சாக்கு மூட்டையில் கொள்ளும் நெல்} = 50 கி.கி

வாகனம் ஒரு முறை எடுத்துச் செல்லும் நெல் மூட்டைகளின் எண்ணிக்கை} = 40

எனவே, வாகனம் ஒரு முறை எடுத்துச் செல்லும் நெல்லின் எடை} = $50 \times 40 = 2000$ கி.கி

அவ்வாறெனில், 15.6 டன் எடையுள்ள நெல்லை எடுத்துச்செல்ல வாகனம் எத்தனை முறை செல்ல நேரிடும்?} = $\left\{\frac{15600}{2000}\right\} = \left\{\frac{156\cancel{00}}{20\cancel{00}}\right\} = 7.8 \rightsquigarrow 8$

$$\begin{array}{r} 7.8 \\ 20\,\overline{)156.0} \\ 140 \\ \hline 16.0 \\ 16.0 \\ \hline 0 \end{array}$$

அறுவடையான முழு நெல்லையும் விற்பனைக் கூடத்திற்கு எடுத்துச்செல்ல வாகனம் **8** முறை சென்றுவர வேண்டும்.

**Information, Rights & Disclaimers** :: Sum & solution prepared on Saturday 27th November, 2021 :: 05:21 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**